## OS.No.427/2024, Dated 27.10.2025

The witness sworn under Oaths Act 1969 on this the 27th day of October 2025.

**வா.சா.1 – செல்வம் த/பெ. கணேசன் வரவழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் எம்.காம். பி.எல்., படித்துள்ளேன். நான் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். நான் எனக்காகவும், மற்ற வாதிகளுக்காகவும், சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். பாகப்பிரிவினை மூலமாக எனது தகப்பனாருக்கு வந்த சொத்துக்கள் சர்வே எண்.75/ 1ல் 50 செண்டும், 75/4 ல் 27 செண்டும், 75/5 ல் 22 செண்டும், 75/4ல் 5 செண்டு கிணறு மேடு ஆகும். பாகப்பிரிவினை மூலம் வந்த சொத்துக்கள் தவிர எனது தகப்பனாருக்கு என்னென்ன சொத்துக்கள் வந்தது என்றால் அவரது பெயரில் பட்டா எண்.45ன்படி சர்வே எண். 75/ 1ஏ–ல் 2 ஏக்கர் 10 செண்டு மற்றும் சர்வே எண்.75/4 ஏ–ல் 25 செண்டும் வந்தது. இதை தவிர சம்பத் என்பவரிடம் ஏற்படுத்திக்கொண்ட பரிவர்த்தனை ஆவணம் மூலமாக எனது தகப்பனாருக்கு சர்வே எண்.75/1 ல் 86 செண்டு 1980 ல் வரப்பெற்றது. சர்வே எண்.75/5 ல் நிர்மலா என்பவருக்கு 22 செண்டை எனது தகப்பனார் 1990ம் ஆண்டு விற்றார். அந்த பத்திரத்தில் நான் கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் நான் போடவில்லை. செந்தில் குமார் என்பவருக்கு நாங்கள் தான் சொத்தைவிற்றோம். அவருக்கு நாங்கள் மொத்தம் 2 ஏக்கர் 63 செண்டை விற்றோம். எனது தாய் வாங்கிய 1 ஏக்கர் 25 செண்டையும் சேர்த்து தான் செந்தில்குமாருக்கு விற்றோம். மேற்படி ஒரு ஏக்கர் 25 செண்டை எனது தகப்பனார் சம்பாதித்து எனது தாயார் பெயரில் வாங்கப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. செந்தில்குமாருக்கு விற்ற கிரைய பத்திரத்தில் யார் யார் கையொப்பம் செய்தோம் என்றால் நான், எனது தாயார், எனது சகோதரிகள் சாந்தகுமாரி, கலைமணி மற்றும் எனது சகோதரர் சுகுமார் மற்றும் மற்றொரு

சகோதரர் ராமகிருஷ்ணன் ஆகிய 1ம் பிரதிவாதி ஆகியோர் கையொப்பம் செய்துள்ளோம். அந்த பத்திரத்தில் கலைமணி மற்றும் சாந்தகுமாரி ஆகியோர் கிரையதாரராக கையொப்பம் செய்யவில்லை என்றால் கிரையதாரராக கையொப்பம் செய்யவில்லை சாட்சியாக கலா என்றும், சாந்தகுமாரியும் கையொப்பம் செய்துள்ளனர். அவர்களின் விருப்பத்தின் பெயரில் தான் கிரையம் செய்யப்பட்டது. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும், சாந்தகுமாரிக்கும், கலைமணிக்கும் பாகம் ஒதுக்கப்பட்டுவிட்டது என்பதால்தான் அவர்கள் கிரையதாரராக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்களிடையே பாகப்பிரிவினை நடக்கவில்லை. எனது தகப்பனாருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட வீடு சுகுமாரின் அனுபவித்தில் உள்ளது. ஆனால் அது குறித்து பாகம் ஏற்படவில்லை. சுகுமார் அந்த இடத்தில் வீடு கட்டி அனுபவித்து வருகிறாரா என்றால் இல்லை. காலி மனையாக உள்ளது. நிர்மலா மற்றும் செந்தில்குமாருக்கு கிரையம் செய்த சொத்துக்கள் மற்றும் தாவா சொத்து தவிர எனது தகப்பனாருக்கு வந்த இதர சொத்துக்களை சுகுமார் தான் அனுபவித்து வருகிறார் என்றால் நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் அனுபவித்து வருகிறோம். தாவா சொத்தில் எங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் பாகம் உள்ளது என்று சொல்லி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இவ்வழக்கின் 3ம் வாதி தாவா சொத்தை 2ம் பிரதிவாதிக்கு கடந்த 2007ம் ஆண்டு அடமானம் செய்தார் என்றால் சரிதான். எங்களுடைய ஒப்புதலின் பேரில் தான் அடமானம் செய்தார். நாங்கள் எழுத்து மூலமாக ஒப்புதல் கொடுக்கவில்லை. வாய் மொழியாக தான் ஒப்புதல் கொடுத்தோம். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும், மூன்றாம் வாதி சுகுமார் மட்டும் தான் தன்னிச்சையாக அடமானம் செய்தார் என்றால் இல்லை. அதே சொத்தை சுகுமார் 2011ம் ஆண்டும் 2ம் பிரதிவாதியிடம் அடமானம் செய்தார் என்றால் சரிதான். இந்த இரண்டு அடமானங்கள் குறித்து எங்களது மூத்த சகோதரரான 1ம் பிரதிவாதிக்கு தெரியும் என்றால் சரிதான். 2007 மற்றும் 2011 ல் சுகுமார் போட்ட

அடமானங்களை நாங்கள் மீட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் மீட்டுவிட்டோம். அவ்வாறு அடமானங்களை மீட்டதற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2011ம் ஆண்டிற்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதி அதே சொத்தை 2ம் பிரதிவாதிக்கு அடமானம் செய்தார் என்றால் அடமானம் செய்தார். ஆனால் எங்களுக்கு அந்த விபரம் தெரியாது. சுகுமாரை அழைத்து சென்று தான் அந்த அடமானம் போடப்பட்டது என்றால் சுகுமாரை அழைத்து சென்று ஏற்கனவே இருந்த அடமானத்தை மீட்டுபுதிதாக அடமானம் போடப்பட்டது. ஆனால் அந்த விபரம் சுகுமாருக்கே தெரியாது. அவருக்கு சரியான படிப்பு அறிவு இல்லை. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு அடமானம் செய்த விபரமும் சுகுமாருக்கு தெரியாது. விபரம் தெரியாமல் கையொப்பம் செய்தார். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும், சுகுமார் வாங்கிய கடனுக்கும் சேர்த்து தான் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு அடமானம் போட்டு கொடுத்தார் என்றால் சரியல்ல. நாங்கள் தான் ராமகிருஷ்ணன் வாங்கிய கடனையும் பைசல் செய்தோம். அவ்வாறு ராமகிருஷ்ணன் வாங்கிய கடனை பைசல் செய்ததற்கு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. எந்த வருடத்தில் அந்த கடன் பைசல் செய்யப்பட்டது என்றால் 29.07.2016 அன்று பைசல் செய்யப்பட்டது. தாவா சொத்தை எந்த வருடத்தில் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் 2016ம் ஆண்டு அதே தேதியில் விற்பனை செய்தார். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்தது சுகுமாருக்கு தெரியும் என்றால் சரியல்ல. எங்கள் யாருக்கும் தெரியாது. இந்த கிரையம் செய்த விபரம் எப்போது எங்களுக்கு தெரிய வந்தது என்றால் 2019ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தான் தெரியவந்தது. அதே தேதியில் அடமானத்தை நாங்கள் பைசல் செய்ததாக சொல்லும்போது, அதே தேதியில் கிரையம் ஏற்பட்டது மட்டும் தெரியாது என்று கூறுவது நம்பும்படியாக இல்லை

என்று சொன்னால் எங்களுக்கு 2019ல் தான் அந்த கிரையம் குறித்து தெரியவந்தது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2025.10.27 18:54:40 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்